ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශේෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 1655/4 - 2010 මැයි 24 වැනි සඳුදා - 2010.05.24
1655/4 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியானது வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

அப்துல் வாஹித் இறைமாலெவ்வை எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப் படவேண்டிய, குறித்த கட்சியைச் சேர்ந்தவரும் ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரை பெயர் குறித்து நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மொஹமட் இப்றாஹிம் சித்தீக் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், துரைசிங்கம் கிருஷ்ணானந்தலிங்கம் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மொஹமட் இப்றாஹிம் சித்தீக் என்பவர், ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

து. கிருஷ்ணானந்தலிங்கம்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஏறாவூர்பற்றுப் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2010, மே 05.

6 - 149

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

*ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. ரொசான் பெரேரா என்பவர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி அச்சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்துல் ஒபூர் முஹம்மது நபீல் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

ஏ. ஓ. எம். நபீல்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2010, மே 05.*

*6 - 150*

---

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

சிலாபம் பிரதேச சபை

*சிலாபம் பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. ரண்கொத்பேடிகே ஜயவீர விக்கிரமரத்ன என்பவர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி அச்சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென சிலாபம் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்துல் ஒபூர் முஹம்மது நபீல் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ(1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

ஏ. ஓ. எம். நபீல்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
சிலாபம் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2010, மே 10.*

*6 - 151*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.